அசல்

19.2.17 [illegible]

அதி -1 [illegible] -1

உ
சிவமயம்

திருவை
19.2.17.

மகாகனம் பொருந்திய ஐயவர்கள் பொன்பாதகமலங்-
களில் அடியேன் ஸ்ரீநிவாஸன் சாஷ்டாங்கமாக
நமஸ்கரித்து விஞ்ஞாபனம்.

க்ஷேமம். "சங்கத்திருத்திக்காலம்"
குறித்து [illegible] வியாசமொன்றை
[illegible] செந்தமிழ்ப் பத்திரிகைக்கு
அனுப்பினேன். ஸ்ரீ. ராகவையங்காரவர்களி-
னின்று மாறுபட அபிப்பிராயமுடையவனாதலால்
அவர்கள் சொல்லியிருப்பது சரியல்லவென்று
எடுத்துக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை
யாயிற்று. இதிலே தங்களைப் பற்றிச் சொல்-
லும்படி நேரிட்டது. "தமிழ்க்குப் பேரிலக்கியம்
வளர்க்கும் புலவர் பெருமான்" என்று எழுதி
யிருக்கிறேன். எங்களுடைய அபிப்பிராயத்தை
வெளியிடும் விஷயத்தில் தாங்கள் மனஸ்தாபப்
பட்டுக்கொள்ளாதவர்களாக எப்பொழுதும் தெரிந்து
கொண்டேன். [illegible]
பட்சத்தில் எனக்கு மதிப்பாலல்ல அவர்களையாவே-
தலைகொடுத்து வருகிறார்கள்.

தங்களுடைய க்ஷேமத்தை
யும் எப்படியாகுகிறது. இவ்விடம் க்ஷேமம்.
தாங்களெல்லாரும் [illegible] சொல்லக்காலம்.
இவ்வுடன் இருக்கால் [illegible]
யும் சேர்த்துச் செய்யும்படி ஆலோசிக்கிறேன்.

அசல்

19.2.17 மதிவாணன்

அறை-1 நாள்-1

உண்டாகும் – சென்னப்பட்டணத்தில் இருத்தல் கூடாது – இவ்விடம் வந்திருக்கலாமென்று நினைத்தால் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய நான் சித்தமாயிருக்கிறேன். ஒருவருக்குந் தொந்திரவு இல்லாமல் பார்த்துக் கொள்ளு கிறேன்.

மகா. ள. ள. வெங்கடராமய்யரவர்களுக்கு இன்றையதினமே எழுதியிருக்கிறேன் – தமிழ்நாட்டுக்கு "ஜாதீயம்" என்னும் வியாசங்களைத் தாங்கள் வாசிக்க வேண்டுமென்று கோரியபொழுது கேட்டுக் கொள்–வதில்லை – தாங்களாய் வாசித்தால் விவரமான அபிப்பிராயந் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்

பரீக்ஷைக்காக ஏற்பட்ட வைத்தமதி களுக்கு ஏற்பாடு செய்வது சுலபமாயிருக்கு மென்று தோன்றுகிறது – தொகைவிவரத்தை யும் மற்றவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் – தமிழில் கண்ணோட்டம் மிகுந்த தாழ்ந்த நிலைமையிலிருப்பதாகத் தோன்று கிறது. இக்காலத்திலுள்ள அனேக பத்திரிகைகள் ஆதாரமாகக் காணப்படுகிறது – தமிழ்க்காரருக் கூட மேல்பட்ட இலக்கணக்கல்வி வேண்டுதல் பி.ஏ, எம்.ஏ, பரீக்ஷைகளுக்குப் பரீக்ஷகர்களாக நியமித்துவிடுகிறார்கள் – இவர் சொல்லப்பட்டது தின் மாத்திரம் பட்டமடையக்கூடிய சங்கத்தால் முதலியவர்களைத் தங்கள் போல் எதிர்பார்க்கவும் இவர் பாடவும் ஆரம்பித்துவிடுகிறார்கள்.

அசல்

19.2.17 பரிதிமாலன்

அஞ்சல் -1 தாள் -1

தமிழ்மொழியைப்பற்றி இருக்கும் நிலைமையால் அதற்காக வேண்டிய காரியங்களை பல இருக்கின்றன - தாங்கள் அச்செய்கையை உண்டாக்கிக் கொண்டுவருகிறீர்கள். இராமாயணமுள்ளார் தங்களுடைய கடமையை யென்றெண்ணித் தெரிந்துகொண்ட-டால் எல்லாம் சரியாய் நடக்கும் - தெரிவிக்கொள்வது தான் கஷ்டமாயிருக்-கிறது.

அகராதியாதலைய சங்கநூல்கள் தங்களால் வெளிப்படாமலிருக்கும்வரை என்போலியவர்களுடைய ஆராய்ச்சிக்குத் தடையாயிருக்கிறது.

மாசம், பக்ஷம், திதி, நக்ஷத்திரம், வாரம் சேர்ந்த ஒருநாளையும் - இன்ன காலங்களில் அமைத் தெரிய வேண்டு சொல்லார் அவ்வாட்டத்தில் அறியவேண்டுமா?. நான் சொல்வது ஸ்வாமிகளுக்கு யாதொன்றும் வாக்கியத் தேவை -

என்னத்தையோ சொல்லவோர் கிடைக்கும் வரையில். நானே தனியாகத் தொடர வேண்டியதிருக்கிறது - ஆராய்ச்சியை மேற்கொண்டால் மறுபடியும் பூர்ச்சியமாய்ப் போய் விடுகிறது. - ஆராய்ச்சிக்கு வேண்டிய புத்தகங்களெல்லாம் கிடையாதென்று.

தமிழ்ச்சிந்தையெல்லாம் தங்களைப் பார்க்கப் பார்க்கிறார்களென்று

ஐதராபாத்தின் மேன்மை யார்யார் அதிகத்துவம் பெற்றதென்று உத்தேசிக்கிறது போலி-கிறது. அதுவே இப்போதைக்கு.

அடியேன்
ஸ்ரீநிவாசன்

நகல்

· 2 ·

சிவமயம்.

தஞ்சை,
19-2-17.

மகாகனம் பொருந்திய ஐயரவர்கள் பொற்பாத கமலங்களில் அடியேன் ஸ்ரீநிவாஸன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து வாக்ஞாபனம்.

க்ஷேமம். 'சங்கத் திருதிக்காலம்' முற்பகுதி என்று பெயருள்ள வியாசமொன்றெழுதி யின்றையதினம் செந்தமிழ்ப் பத்திரிகைக்கனுப்பினேன். - மு. ராகவையங்காரவர்களினின்று மாறுபட்ட அபிப்பிராய முடையவனதலால் அவர்கள் சொல்லியிருப்பது சரியல்லவென்று எடுத்துக் காட்ட வேண்டியது என்னுடைய கடமையாயிற்று. ஓரிடத்தில் தங்களைப் பற்றிச் சொல்லும்படி ~~ஆயிற்று~~ நேரிட்டது. "தமிழுக்குப் பேரிலக்காய் விளங்கும் புலவர் ~~சிகாமணி~~ பெருமான்" இன்னாரென்று எழுதியிருக்கிறேன். எங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடும் விஷயத்தில் தாங்கள் மனஸ்தாபப்படக் கூடாதென்பதற்காகவப் பொழுதே தெரிவித்துக் கொண்டேன்- கவர்ன்மெண்டார் கொடுக்கும் பட்டத்தில் எனக்கு மதிப்பில்லை. அவர்கள் யாருக்கும் கொடுத்து விடுகிறார்கள்.

தங்களுடைய தேக சௌக்கியம் எப்படியிருக்கிறது- இஃது முக்கியம். தாங்களெல்லா வேலையும் விட்டு சொல்பகாலம் ஓய்வுடனிருந்தால் பிறகு வாட்டி இந்த வேலையையும் சேர்த்துச் செய்யும் பலமும் ஆரோக்கியமும் உண்டாகும்- சென்னபட்டணத்தில் இருத்தல் கூடாது. இவ்விடம் வந்திருக்கலாமென்று நினைத்தால் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய நான் சித்தமாயிருக்கிறேன்- ஒருவராலுந் தொந்திரவு இல்லாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்.

ம-கா-ஸ-ஸ-ஸ்ரீ வெங்கட்ராமய்யரவர்களுக்கு இன்றையதினம் எழுதியிருக்கிறே

நகல்

ன். 'தமிழ்நாடுகள்', 'ஐந்திரம்' என்னும்
வியாசங்களைத் தாங்கள் வாசிக்கவேண்டு
மென்று நானிப்பொழுது கேட்டுக் கொள்
வதில்லை. தாங்களாய் வாசித்தால்வவ
ரமான அபிப்பிராயம் தெரிந்து கொள்ளவி
ரும்புகிறேன்.

பரீக்ஷைக்காக ஒன்பது வெகுமதிக
ளுக் கேற்பாடு செய்வது சுலபமாய் முடியு
மென்று தோன்றுகிறது. தொகை வரை
யத்திலும் மற்றவற்றிலும் தங்கள் அபிப்பி
ராயந் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
தமிழிலக்கண ஞானம் மிகவுந் தாழ்ந்த
நிலைமையிலிருப்பதாகத் தோன்றுகிறது.
இக்காலத்திலுள்ள அநேக பிதற்றல்களுக்
கு அது காரணமாகக் காணப்படுகிறது.
தமிழ்க்காற்றுக் கூட மேல் படாத சிலரைக்
கவர்ன்மெண்டில். பி.ஏ. யம்.ஏ. பரீக்ஷை
களுக்குப் பரீக்ஷகர்களாக நியமித்து விடு
கிறார்கள். இவர் சொற்பம் படிக்குமுன்
வித்வான் பட்ட மடையக் கருதி சங்கநூல்
முதலியவற்றைத் தங்கள் பேரால் பதிப்பிக்க
வும், இவர் பாடவும் ஆரம்பித்து விடுகிறார்
கள்.

தமிழிப் பொழுதிருக்கும் நிலைமையில்
அதற்காக வேண்டிய காரியங்கள் பலவிரு
க்கின்றன. தாங்கள் சுறுசுறுப்பை உண்டா
க்கி விட்டு விட்டீர்கள். இந்நாட்டிலுள்
ளார் தங்களுடைய கடமையை யின்ன
தென்று தெரிந்து கொண்டால் எல்லாம்
சரியாய் நடக்கும். தெரிந்து கொள்வது
தான் கஷ்டமாயிருக்கிறது.

அகநானூறு முதலிய சங்கநூல்கள்
தங்களால் வெளிப்படாமலிருக்கும் வரை
என் போலியருடைய ஆராய்ச்சிக்கே தடை
யாயிருக்கிறது.

மாசம், பக்ஷம், திதி, நக்ஷத்திரம்
வாரம் சேர்ந்த ஒரு நாளை யின்னின்ன

நகல்

காலங்களில் அப்படி நேரிட்டதென்று
சொல்வார் அவ்விடத்தில் அகப்படுவார்
களா? நான் சொல்வது ஸ்வாமிக்கண்
ணுப்பிள்ளை யவர்களைத் தவிர.

எனக்குப் பாடஞ் சொல்வோர்கி
டைக்கும் வரை நானே தான் படித்துக்
கொள்ள வேண்டியதிருக்கிறது. ஆராய்ச்
சியை மேற்கொண்டால் மற்றப் படிப்பு
பூச்சியமாய்ப் போய்விடுகிறது. ஆராய்ச்
சிக்கு வேண்டிய புஸ்தகங்கள் இவ்வூரில்
கிடைப்பதருமை.

குறிஞ்சித் தெய்வம் தனக்கென
வாழாப் பிறர்க்குரியாளரான தங்களவர்
களின் மேன்மையாளை யுணர்த்தற் பொருட்டு
மேற்றிகரித்து வருகின்றது. அது நீடூழி
வாழ்க.

அடியேன்,
ஸ்ரீநிவாஸன்.

நகல்

7.

(உ)

அ 185

19.2.17

[illegible]

(௬௪)

[illegible] 19-2-17.

Copied.
[illegible] vol IV.
p - 183 - 187.

(30)